## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் மன்றத்தின் (மன்றம்) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதிக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2019 இன் 23 ஆம் இலக்க இலங்கை நிர்மாணக் கைத்தொழில் மன்ற (கூட்டிணைப்பு) சட்டத்தின் 10(3) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன. இக்கணக்காய்வை மேற்கொள்வதில் பொதுத்தொழிலில் ஈடுபட்டுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றினால் எனக்கு உதவப்பட்டது.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, மன்றத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதிக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நான் எனது கணக்காய்வை மேற்கொண்டேன். இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையிலுள்ள இந்நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவின் கீழ் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. இந்நிதிக்கூற்றுக்கள் மீது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு நான் பெற்றுக்கொண்டுள்ள சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு மன்றம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் மன்றத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது மன்றத்தின் ஆளுகைத் தரப்பினரால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க மன்றம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க மன்றம் நடவடிக்கை எடுத்துள்ளதாக.

- மன்றத்தின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 கணக்கீட்டுன் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கணக்காய்வுக்கு உட்படுத்திய காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 8,310,195 தொகையான இலங்கையினை கட்டியெழுப்புதல் கண்காட்சி வரு மானத்தினுள் முன்னைய ஆண்டு மற்றும் எதிர்வரும் ஆண்டுக்குரிய முறையே ரூபா 6,420,195 மற்றும் | அநேகமான கண்காட்சி அறைகளின் வாடிக்கையாளர்கள் முழுப் பணத்தை யும் செலுத்தும் வரை நிச்சயமற்ற நிலை காணப்பட்டமையினால் மன்றம் கூட்டிணைக்கப்படுவதற்கு முன்னர் இலங்கையினை கட்டியெழு ப்புதல் கண்காட்சி வரு மானத்தின் உள்ளபடியான தொகை முழுவதும் வருமானமாக கணக்கீடு செய்யும் | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் அட் டுறு கணக்கீட்டு அடிப் படையினை பயன்படு த்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 1,890,000 தொகைகள் உள்ளடங்கியுள்ளன. இருப்பினும்,இந்த வருமானங்களை உரிய கணக்குகளில் பதிவு செய்யாது மன்றம் இவற்றை இவ்வாண்டிற்கான வருமானமாக கருதியிருந்தது. இதன் விளைவாக, காலப்பகுதிக்கான பற்றாக்குறை ரூபா 8,310,195 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நடைமுறை காணப்பட்டது.<br><br>இருப்பினும், இதனை நாங்கள் திருத்திக்கொண்டு LKAS 1 இலுள்ள ஏற்பாடுகளை பின்பற்றுவோம். | |
| (ஆ) உயர்தொழில் நிலையமொன்றை தாபிப்பதற்கான காணியினை ஒதுக்கிக் கொள்வதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்திய ரூபா 500,000 செயன்முறைப்படுத்தல் கட்டணம், மீளளிக்கப்படும் வைப்பாக ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும, இத்தொகை மீளளிக்கப்படும் எனக் கருதப்படுவதற்கான எவ்வித சான்றும் காணப்படவில்லை. ஆகையால், மீளாய்வுக் காலப் பகுதிக்கான பற்றாக்குறையும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களும் ஒத்த தொகையால் முறையே குறைத்தும் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன. | மன்றத்திற்கென சொந்தமாக அலுவலகக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு 30 ஆண்டு குத்தகை அடிப்படையில் காணியொன்றை பெற்றுக் கொள்வதற்கான செயன் முறைப்படுத்தல் கட்டணத்திற்கு ரூபா 500,000 தொகையான வைப்பொன்றை செய்யுமாறு எம்மை நகர அபிவிருத்தி அதிகாரசபை கேட்டுக் கொண்டது. அதற்கமைய, அத் தொகை ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டது. எதிர்வரும் ஆண்டில் இதனை நாம் செலவினத்திற்கு சாட்டுகின்றோம். | சொத்துக்கள் மற்றும் செலவினத்தை தனித்தனியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) மேலதிகமாகப் பெறப்பட்ட ரூபா 74,409 தொகையான சந்தாப் பணமும் முற்பணமாகப் பெறப்பட்ட ரூபா 24,227,663 தொகையான இலங்கையினை கட்டியெழுப்புதல் கண்காட்சி வருமானமும் வெவ்வேறாக கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக வியாபாரக் கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன்காரணமாக, 2019 திசெம் பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை ரூபா 7,114,258 மறைப் பெறுமதியாக காணப்பட்டது. | இதன்பின்னர் அவ்வாறான கொடுப்பனவுகள் சரியாக வடிவமைக்கப்பட்ட கணக்குகளில் கணக்கீடு செய்யப் படும். | இவ்வாறான கோட்பாட்டு ரீதியான கணக்கீட்டு வழுக்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 உறவுமுறைத் தரப்பினரும் வெளிப்படுத்தப்படாத உறவுமுறைத் தரப்புக் கொடுக்கல் வாங்கல்களும்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 நவம்பர் 15 முதல் 2027 திசெம்பர் 31 வரையான காலத்திற்குரிய ரூபா 15,000,000 குத்தகை வாடகை முழுவதையும் முற்பணமாகச் செலுத்தி அலுவலக வளவொன்றை 09 ஆண்டுகளிற்கு குத்தகைக்குப் பெறுவத ற்காக 2019 ஆகஸ்ட் 02 ஆந் திகதி மன்றத்திற்கும் தனியார் கம்பனி ஒன்றுக்கும் இடையே குத்தகை உடன்படிக்கையொன்று கைச்சாத் திடப்பட்டிருந்தது. இருப்பினும், மேற்படி தனியார் கம்பனியின் பணிப்பாளர் மன்றத்தின் தலைவராகவும் செயற்படு கின்றமை அவதானிக்கப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை | உறவுமுறைத் தரப்பின ரையும் உறவுமுறை த் தரப்புக் கொடுக்கல் வாங்கல்களையும் வெளிப்படுத்தப்படுத்துவத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ)2017 இன் 24 ஆம் இலக்க உள் நாட்டு இறைவரி சட்டம் மற்றும் 2018 ஏப்ரல் 18 ஆந் திகதிய SEC/2018 /06 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி த் திணைக்கள த்தின் சுற்றறிக்கை | சன்கன் கொன்ஸ்ட்ரக் ஷன் (பிரை வட்) லிமிடட் இற்கு செலுத்திய ரூபா 15,000,000 கட்டிட வாடகையிலிருந்து ரூபா 1,500,000 தொகை யான நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்டு உள் நாட்டு இறைவரித் திணைக் களத்திற்கு அனுப்பிவைக் கப்பட்டிருக்கவில்லை. | இது ஒரு தவறவிடுத லாவதுடன் 2018 நவம் பர் மாதத்தில் இக் கொடுப்பனவு மேற்கொ ள்ளப்பட்டுள்ளமையால்இ து 2018/2019 நிதியா ண்டுக்கு உரித்தான தாகும். நாம் இந்த வரியினைக் கழித்து நிறுத்திவைத்தல் வரிச் சான்றிதழை வழங்கியி ருக்காமையால் சன் கன் கொன்ஸ்ட்ரக்ஷன் (பிரைவட்) லிமிடட் எந்தவொரு நிறுத்தி வைத்தல் வரியினை யும் கழித்துக் கொள் ளாது அதனது வரி களை பூரணப்படுத்திச் செலுத்தியுள்ளது. | உள்நாட்டு இறை வரி சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகுவத ற்கு மன்றம் நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2019 இன் 23 ஆம் இலக்க இலங் கை நிர்மாணக் கைத் தொழில் மன்ற (கூட்டிணைப்பு) சட்டத் தின் 12 ஆம் பிரிவு | இச்சட்டம் தொடங்கும் திக திக்கு நேர்முந்திய நாளன் று உளதாயிருக்கும் மன்ற த்தின் எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் | வணிகச் செயற்பாடு கள் தங்குதடையின்றி தொடர்ச்சியாக முன் னெடுக்கப்பட்டமையால் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறு நாம் செயற்பட்டிருக்கவில் | சட்டத்திலுள்ள ஏற் பாடுகளுடன் மன் றம் இணங்கி ஒழுகு தல் வேண்டும். |

| | |
|---|---|
| கூட்டிணைக்கப்பட்ட மன்றத்தினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட மன்றத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும். எவ்வாறாயினும், கணக்காண்டு காலத்தின் ஆரம்பத்தில் ரூபா 2,641,767 வியா பார மற்றும் ஏனைய பெறுவனவுகளும், ரூபா 6,304,866 நடைமுறை மற் றும் நடைமுறைய ல்லாத பொறுப்புக்களும் காணப்பட்ட போதிலும், மன்றம் இ தேவைப்பாடுகளுடன் இணங்கி ஒழுகியிருக்கவில்லை. | லை. ஏற்பட்ட ஒரேயொறு மாற்றம் புதிய நிறுவகத்திற்கு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கையேற்கபட்டமையாகுமென்பதுடன் முகாமைத்துவச் சபையில் எவ்வித மாற்றமும் இடம்பெறவில்லை |

## 2. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 2.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவத்தினால் நிறுவனத்தின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான தந்துரோபாயங்களை இனங்கண்டு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | தொழில்முயற்சியின் எதிர்கால நெறிப்படுத்தலுக்கான தந்துரோபாயங்களை உள்ளடக்கி மூன்று ஆண்டுகளிற்கு குறையாத காலத்திற்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 2.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மன்றத்தினால் இலக்குகள் நிச்சயிக்கப்பட்டு உத்தியோகத்தர்களிற்கு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டு அந்த இலக்குகளை குறித்த காலப்பகுதியில் அடைந்து கொள்வதற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்குகள் நிச்சயிக்கப்பட்டு மற்றும் உரிய உத்தியோகத்தர்களிற்கு பொறுப்புக்களும் கால எல்லைகளும் ஒப்படைக்கப்பட்டு கூட்டிணைந்த திட்டத்திற்கு அமைவாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

## 3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நான்கு வருமான மற்றும் செலவின விஜடயங்களிற்குரிய உள்ளபடியான மற்றும் பாதிடப்பட்ட தொகைகளிற்கு இடையே 46 சதவீதம் முதல் 518 சதவீதம் வரையான வீச்சில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப் படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது. | கருத்துத் தெரி விக்கப்பட்டிருக்க வில்லை. | பாதீட்டை பயனுள்ள முகாமைத்து வக் கட்டுப் பாட்டுக் கரு வியொன்றாக பயன்படுத் திக் கொள் வதற்கு முகாமைத்து வம் உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | 2019 உள்ளபடியான | 2019 பாதிடப்பட்ட | வேறுபாடு | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | (% ) |
| வருமானம் | 28,911,694 | 19,677,872 | 9,233,822 | 46 |
| நேர்க் கிரயம் | 18,250,424 | 6,779,996 | 11,470,428 | 169 |
| ஏனைய வருமானம் | 3,633,803 | - | 3,633,803 | 363 |
| நிதிக் கிரயம் | 27,824 | 4,500 | 23,324 | 518 |